முதன்மை சார்பு நீதிமன்றம், பழனி

M.A.C.O.P. No. 17/2023

MCOP No.19/2023

2026–ம் வருடம் மார்ச் மாதம் 16–ம் நாள் சாட்சியின் வாக்குமூலம் 1873–ம் வருடத்தின் 10–வது விதிமுறைகளின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: திரு. ஹரிஹரன் (எ.ம.சா.1) | தொழில்: |
| த/பெ: | பாலினம்: |
| கிராமம்: | வயது: |
| மாவட்டம்: | நாள்: 16–03–2026 |

முதல் விசாரணை:

நான் பழனி மோ.வா. அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணியாற்றுகிறேன். நீதிமன்றத்திலிருந்து வந்த அழைப்பாணையின்பேரில் சாட்சியம் அளிக்கிறேன். சாட்சியம் அளிக்க எனக்கு எங்கள் அலுவலகத்தால் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. பிரமானந்தம், த/பெ.ராமசாமி, 411, புதுஆயக்குடி, பழனியில் வசிக்கும் நபருக்கு 06.11.2022 காலகட்டத்தில் எங்கள் அலுவலகத்தில் ஓட்டுநர் உரிமம் வழங்கப்படவில்லை. அதற்கான சான்று மற்றும் மேற்படி அதிகார ஆவணம் Ex.X.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி முகவரியில் உள்ள நபருக்கு ஓட்டுநர் உரிமம் வழங்கவேண்டும் என்றால் எங்கள் அலுவலகத்தில் தான் வழங்கவேண்டும்.

மனுதாரர் குறுக்கு விசாரணை –

மேற்படி முகவரியில் வசிக்கும்கார்த்திகேயன் என்பவர் வேறு முகவரியை காட்டி ஓட்டுநர் உரிமம் பெற்றிருந்தால் அது எங்கள் அலுவலகத்தில் துலங்காது என்றால் சரிதான்.

ஒம்./–K.ரேணுகாதேவி,
முதன்மை சார்பு நீதிபதி,
பழனி.